தொகுதி - ௫௯ :: பகுதி - ௧௨ Vol. 59 :: No. 12

# செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1994
சோபகிருது — பங்குனி
MARCH — 1964

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 17—8—64)

## உள்ளுறை


1. துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் — 273
   ஆ. சிவலிங்கனர்
2. கோவலன் கொள்கை — 279
   கே. வசந்தா
3. உலகம் — 286
   "பா. வே."
4. கற்றதனாலாய பயன் — 287
   வெ. சுப்பிரமணியன்
5. மானங்காத்த மங்கையர் — 294
   மதுரைக் குமரன்
6. கடமையுணர்வு — 302
   அன்பு. கருணையானந்தம்
7. அமரர் நேருவுக்கு அஞ்சலி — 303
   இரா. வே. நாராயணன்



"செந்தமிழ்"

நிர்வாக ஆசிரியர்

தமிழவேள்

திரு. பி. டி. இராசன் B. A.(Oxon), Bar-at-law

உ
கடவுள் துணை

# செந்தமிழ்

| தொகுதி ருக<br>Vol. 59 | திருவள்ளுவர் ஆண்டு 1994<br>சோபகிருது — பங்குனி<br>1964 March | பகுதி 12<br>No. 12 |
| --- | --- | --- |

(முன் இதழ் 271-ம் பக்கத் தொடர்ச்சி)

# துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்

( ஆ. சிவலிங்கனர், மயிலம். )

ஒருபொருளை உண்டு என்று நிறுவுவதற்கு மூன்று அளவு கருவிகள் உள அவை, காட்சி, கருத்து, நூல்என்பன கண்ணுற்கண்ட பின் ஒரு பொருளை உண்டு என்பது காட்சி யளவையால் நிறுவுதலாம். புகைமட்டும் கண்டு காணுத நெருப்பு ஆங்கு உண்டு என்பது கருதல் அளவையால் நிறு வுதலாம். நூல்கள் சொல்வனகொண்டு உண்டு என்பது நூல் அளவையால் நிறுவுதலாம் இங்கு அடிகள் கருதல் அளவையினை மேற்கொண்டார். பெண்களுக்கு இடைசிறியது. "நூல் பகவன்ன நுண்மருங்குல்" என்று நம்அடிகளே கூறியுள்ளார். (நால். நா. மாலை. 15.)

"பொய்யோ எனும் இடையாள்" என்றூர் கம்பரும். இங்கு மாயைக்கு இடை யுண்டா இல்லையா என்ற ஐயம் அறிஞர்க்கு வந்தது பார்த்தால் இடை தெரியவில்லை. புகை

யுள்ள இடத்தில் நெருப்பும் இருக்கும் என்று கருதலளவை யால் உறுதிப்படுத்துவது போல மாயைக்கு இடையுண்டு என்று உறுதிப்படுத்துகின்றார்களாம். அதாவது நகில்கள் மேலிருப்பதால் அவற்றைத் தாங்குதற்கு கீழே ஒருபொருள் இருந்தேயாகவேண்டும். நகில்களுக்குக் கீழ்ப்பகுதி யிடையே யாகலின் இடை யிருக்கத்தான்வேண்டும் என்று உறுதிப்படுத்துகின்றார்களாம். 'அப்படி உறுதிப்படுத்திச் சொல்லும்படியமைந்த மருங்குலையுடைய தொகை என்றார் அடிகள்.

வான நூற்புலமை:- வான நூற்புலமைக்கு மூன்று சான்றுகள் காணலாம்.

(1) மாயையானவள் தக்க பருவமடைந்தனள். அதனால் மன்மதன் முனிவர்களாகிய பகைவர்களை வெல்லக் கருதிப் போர்க்குப் புறப்பட்டான். இவ்விடத்து அடிகள் கூறிய பாடல் பின்வருமாறு;—

"இந்தக் கன்னி மதிமுழு நோக்
கெய்திச் சேவ்வாய் வலியடைந்து
சந்தச் சிங்கந் தனையடுத்த
தக்க அரவின் வலிசார்ந்து
முந்தைக் கோடிமீ னத்தலைவன்
முனிவ ரர்தும் பகைவெல்லக்
கந்தப் பகழி பலவேழக்
கருப்புச் சிலையிற் றொடேத்தனனால்"

(பிரபு-மாயையுற் - 58)

இப்பாடல் இருபொருள்பட அமைந்துளது. "மீனக்கொடி யுடைய தலைவனாகிய மன்மதன் இந்த மாயையினது முக மாகிய மதியின் முழு நோக்கையும்பெற்று" அவளது செவ் விய வாயின் வலிமையை யடைந்து அழகிய இடையினை

யடுத்த அல்குலின் வலியையும் அடைந்து தனது பகைவ ராகிய முனிவரை வெல்லவேண்டி மணமுள்ள மலர்களா கிய அம்புகளைச் சிலையில் தொடுத்தான்'' என்பது பாட்டின் பொருள்.

“மீனராசியின் தலைவன் ஏழாமிடமாகிய கன்னிராசியி லுள்ள சந்திரனது பார்வையை நன்றாக அடைந்து பதி னொராம் இடமாகிய மகரஇராசியின் இருக்கும் செவ்வா யின் வலியை யடைந்து ஆறாமிடமாகிய சிம்ம ராசியிலிருக் கும் ராகுவின் வலியையும் அடைந்து பகைவெல்ல அம்பி னைச் சிலையில் தொடுத்தனன்''. என்பது நயப்பொருள். 7, 6, 11 ஆகிய இடங்களில் முறையே சந்திரன், ராகு, செவ்வாய் இருந்தால் தலைவன் பகையைத் தொலைப்பான் என்று வானநூல் கூறும்.

(2) கன்னி யத்தம்வந் தினமணிக் கற்கட கத்தின்
மன்னி யுற்றதற் புதமென வளைபல காக்க
வின்னு தற்கருங் கண்மட மாதுகை விளங்கப்
பொன்னி னற்கட கம்புனைந் தனளொரு பூவை.

இப்பாடலும் இருபொருளுடையதாம். “கன்னியாகிய மாயையின் மணிகளழுத்தப்பட்ட கடகத்தினுள்ளே நிலை பெற்றது அற்புதம்' என்று சொல்லும்படியாக வளைகள் பலவற்றைக் காக்கும்படி ஒளியுடைய நுதலினையும் கருங் கண்களையும் மடப்பத்தினையும் உடைய மாயையின் கைகள் விளங்கும்படிப் பொன்னாலாகிய நல்ல கடகத்தை ஒரு பூவை புனைந்தனள்'' என்பது ஒரு பொருள்.

“கன்னியராசியிலுள்ள அந்த நாள்வந்து, கூட்டமான முத்துக்கள்போன்ற கற்கடக இராசியினுள்ளே நிலைபெற் றது அற்புதம்'' என்பது இரண்டாம் நயப்பொருள். வான நூலார் இருபத்தேழு நாட்களையும் பன்னிரண்டு இராசி

களில் அடக்கினர். அடக்கும்போது ஒரு இராசிக்கு இரண்டேகால் நாட்களாகவரும். அதனால் கன்னியாராசிக்கு உத்திரம் $\frac{3}{4}$ அத்தம் 1; சித்திரை $\frac{1}{2}$ ஆகவும், கடகத்துக்குப் புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் 1; ஆயில்யம் 1 ஆகவும் வரும் இவற்றுள் கன்னிக்குரிய அத்தம் கடகத்தில் பொருந்தியது என்னின் அற்புதமாகும் அன்றோ?

3. நக்கீரர் காலத்தில் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. அதன் காரணத்தை விளக்கும் பாடல் வருமாறு.—

காலமங்கதில் உரோகிணியிற் கரியவன் புகுத
வாலவெவ்வர வடுத்தவீ ருவாவினு மழன்று
கோலவெஞ்சுடர் தண்சுடர் இரண்டும் கோள்ள வாய்
ஞாலமைந்தனும் வெள்ளியும் இகல்பட நடந்தார்

(சீகா. நக். 51)

உரோகிணி நாளில் சனி நுழையச், சூரியகிரணமும் அமாவாசை பௌர்ணமிகளிலே அடுத்துவரச் செவ்வாய் முற்பட்டும், சுக்கிரன் பிற்பட்டு நடந்தனர். அதனால் மழை பொழியாது நீங்கப் பஞ்சம் வந்தது'', என்றார் அடிகள்.

**நில நூற் புலமை:**

ஈன்றநாள் தொடங்கிச் செய்கடன் முற்றும்
இயற்றினன் மாதர சன்தான்
தோன்றுமோர் குழவிப் பதங்கடந் தெங்கோன்
சோல் குரு முன்னுறுங் காலை
ஆன்றமா மறைகள் முதலவாய்த் தான்முன்
அறிந்துள கலையெலாம் அறிந்தான்
சான்றதா மதியம் இரவிவந் திறுப்பத்
தன்கதிர் தானடை குதல்போல

(பிரபு. அக். உற். 29.)

வசவதேவர் குழவிப் பருவம் கடந்து கல்விபயிலும் பருவம் வரப்பெற்றனர். அவர் ஓராசிரியரிடத்துக் கழைத்துச் செல்லப்பட்டார், ஆசிரியரின் எதிரில் நிற்கும் போதே பயிற்றப் படவேண்டிய மறைமுதற்கலைகள்யாவும் பயிற்றப் படாமலேயே நிரம்பப்பெற்றமைக்குக் கொடுக்கப்பட்ட வுவமை மேற்பாடலில் இறுதியடியில் உள்ளதாம்.

"சந்திரனுக்கு இயற்கையில் ஒளியில்லை; சூரியனின் ஒளியையே தான் பெறுகிறது. பெற்றுப் பின்னர்தான் உலகுக்கு ஒளிதருகிறது" என்பது நிலநூல் துணிபு சூரியனின் எதிரில் நிற்கும்போது சந்திரன்தான் ஒளி நிரம்புதல் போலக் குருவின் முன்னிலையில் நிற்கும் போதே வசவர் கலைகள் யாவும் நிரம்பப் பெற்றார்".

2. பூமி உருண்டை என்பது நிலநூல். அதனை நம் அடிகள் கூறாமல் கூறுகின்றார்கள். நாம் வடக்கு என்று சொல்வது வடக்கன்று; அதுவே தெற்காகவும் ஆகும் தெற்கெனப்படுவதும் வடக்காகும், பூமியுருண்டையாய் இருத்தலின் இதுவரையிலும் வடக்கு இதுவரையிலும் தெற்கு என்று சொல்லப்படாது இப்படியே கிழக்கும் மேற்கும் ஆம் இதனையடிகள்,

குடக்கெனப் படாக் குணக்குங் குணக்கெனப் படாக்குடக்கும்
வடக்கெனப் படாத தெற்கும் தெற்கெனப் படா வடக்கும்
நடக்கும் மெய்ப்புகழ்மாக் கச்சிநகர்ச்சிவரான தேவே
படைக்கு மப்பெரியோன்தன்னைப் பரவுவார் பரவு வாரே.

(சிவ. கலம்: 48)

**மருத்துவப் புலமை:** அடிகள் மருத்துவப் புலமையும் உடையவராகலாம். அவர் பாடலில் காணப்படும் குறிப்புக்

கள் வெளிப்படுத்துகின்றன. வாதபுத்த சிலேத்துமங்கள் மக்களுக்கு மிக்க துயரைச் செய்வன என்பதை "நீங்கரும் துயர்செய் வளிமுதல் மூன்றன் நிலையுளேன்" (சோண. 3,) என்று கூறுவதும், கபம் மேலிடுமானுல் உயிர் நீங்கிவிடும் என்பதையும் அக்காலத்தில் என்னென்ன அறிகுறிகள் தோன்றும் என்பதையும்,

சிந்தனை கலங்கி யிணைவிழியிருண்டு
சேவிகளும் சேவிடுபட் டைடமேல்
உந்திட உயிர்போம் போழுதில்" (சோண. 78,)

எனக் கூறுவதும் காணலாம்.

இனி அடிகளின் இலக்கியப் புலமை பற்றிக் கூறத் தேவையில்லை. தம் காலம் வரை யுள்ள நூல்கள் அனைத்தும் பயின்றவர் என்னலாம். சங்க இலக்கியங்கள் முதல் உள்ள இலக்கியங்களில் காணப்படும் கருத்துக்களை ஆங்காங்கே தம் நூல்களில் கூறியுள்ளமை எடுத்துக் கூறின் விரிவுபடும் அதனுல் இலக்கியப் புலமை பற்றி எழுதாது விடுகின்ருேம்.

## தமிழ் மொழி

"பா. வே"

உலகின் முதலாய் உதித்த மொழியே
இலகும் தமிழென இலக்கிய வல்லுநர்
சொல்லக் கேட்டோம் சொல்லவர் சொல்லில்
எல்லாப் பொருளும் இலங்கக் கண்டோம்
இலக்கியப் பெருமையும் இலக்கண வரம்பும்
உலகினில் தமிழ்போல் ஒருமொழி கூடப்
பெற்றதே இல்லை! பெற்றவப் பெருமை
உற்றநம் தமிழ்க்கே உரிய தாமே!
வாழ்க! அம்மொழி வாழ்க! வாழ்கவே!

# "கோவலன் கொள்கை"

கே. வசந்தா, எம். ஏ.

நெஞ்சோடு உரையாடி நினைவோடு உறவாடும் செந்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரம் பற்றிப் பேசாத பேச்சாளரோ, எழுதாத எழுத்தாளரோ இல்லை என்னலாம். கலை மணமும், இன்பக் கவிமணமும் துன்பக் கதை மணமும் நற்கற்பனை மணமும் ஒன்றுகலந்து மணக்கும் தமிழ் மணச் சோலையாகிய சிலம்பை ஆராய முற்பட்ட அறிஞர் பெருமக்கள் அனைவரும் அதன் சிறப்பைப் பலவாறு விதந்து ஓதியுள்ளார்கள். மாதவி—கண்ணகி—கோவலன் என்னும் முக்கோண அடிப்படையில் எழுந்த முதற்பெருங் காப்பியமாம் சிலம்பு மூன்று பேருக்கும் மூன்றுவித முடிவுகளைத் தந்துள்ளது. கோவலன் கொலையுண்டான், மாதவி கலை வாழ்வை இழந்தாள். கண்ணகி கடவுளானாள். இவ்வாறு முடியும் இக்காப்பியத்தின் அடித்தளமாக அமைவது கோவலனின் முதற்பிரிவுதான். கண்ணகியைத் துறந்து மனையகம் மறந்து மாதவிபால் கட்டுண்டு கிடந்த காலமே முதற்பிரிவு என ஈண்டுச் சுட்டப்படுகிறது. கதை வளர்ச்சிக்கு இப்பிரிவு நிகழ்ச்சிதான் பின்னணியாக அமைகிறது. பிரிவிலே தொடங்கிய வாழ்வு பிரிவிலேயே முடிகிறது.

இந்தப் பிரிவு பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் எழுந்த கருத்து கண்ணகியிடம் ஊடற்பண்பு இன்மை என்பதாகும். கண்ணகியிடம் ஊடற்பண்பு இருந்திருக்குமானால் கலைவல்ல கோவலன் தன்னிலை பிறழ்ந்து இருக்கமாட்டான் என்பது அக்கருத்தாளர்களின் முடிபும் ஆகும். ஆனால் இது சரியான முடிபுதானா? ~~இவ்வினா?~~ இவ்வினாவின் மைபத்தில் எழுந்ததுதான் இக்கட்டுரை.

**கோவலன் கருத்து:**

கோவலன் ஊடலைப் பற்றி என்ன கருதுகிருன்? கானல் வரியில் விடை காணலாம்.

> "திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோலது வோச்சிக்
> கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
> கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணய்
> மங்கை மாதர் பெருங்கற்பு என்றுணர்ந்தேன் வாழி காவேரி

கங்கையைச் சோழன் புணர்ந்தான். அச்சோழன் காவிரியின் காதற்கணவன். தானிருக்கப் பிறிதொருத்தியைப் புணர்ந்த கணவனை அவள் சினக்கவில்லை; அந்தப் பிறிதொருத்தி கங்கை என்பதும் அவளுக்குத் தெரியும். இருந்தும் அவள் புலந்து நிற்கவில்லை. காரணம் என்ன? கோவலன் சொல்லுகிருன்:—"அது மங்கை மாதர் பெருங் கற்பு" கற்புடைய மங்கை ஆதலினுலே காவிரி ஊடவில்லை. கோவலன் கருத்துப்படிக் கற்புடைய மங்கையர் ஊடுதல் தவறு. அப்படி இன்றிக் கற்புடையவள் ஊடினுல் அவள் கற்பிலே ஐயம் ஏற்படுமா? இதற்கு விடை இல்லை. அது இங்குத் தேவையற்றதும் வேண்டப்படுவதும் கோவலன் கொண்ட கொள்கையே ஆகும்.

இவ்வடிப்படையில் நின்று காணும்போது கண்ணகி ஊடாமல் இருந்தது ஏற்றுக் கொள்ளத் தக்கது தானே? கண்ணகி பெருங்கற்புடையவள் ஆதலால் ஊடுதல் ஒழிந்தாள். கோவலனின் கொள்கைக்கு உருவம் கொடுத்தாள் கண்ணகி. கணவன் கருத்தறிந்து நடந்தாள். இங்கு வேறொரு வினு எழுப்பப்படலாம். "கணவன் கருத்தறிந்தவள் கண்ணகி ஆகையால் ஊடவில்லை எனச் சொல்லின் கொலைக்களக் காதையில் 'போற்ரு வொழுக்கம் புரிந்தீர் எனக் கடிந்து பேசுகிருளே, அஃது ஊடலல்லாது வேறு

என்ன? என்பதே அவ்வினுவாக இருக்கக்கூடும். ஆனல் அவ்வுரையை ஊடலுரை எனச் சொல்லுதற்கு இயலாது. கணவனின் குறையை அவள் எடுத்துக்காட்டிப் பேசுகிருளே அல்லது ஊடல் கொண்டு அதனை உரைக்கவில்லை, அறிவுறுத்தும் செயலாக அதைக் கொள்ளலாம். வாதத்துக்காக, அதை நாம் ஊடல் எனக் கொள்வோம், அப்படிக் கொண்டு ஆராய்ங்கால் சிலம்பு தோற்றுவிக்கும் இச்சிக்கலுக்கு நல்லதொரு விடையும் காணமுடியும்.

## கண்ணகியின் ஊடல்

ஊடல் கற்புடைய மகளிர்க்குக் கூடாது எனக் கருதும் கணவன் ஒருபுறம். ஊடாமலே இருந்து பின்னர் ஊடத் தொடங்கிய உரைசால் பத்தினி மறுபுறம். தவிர்க்க முடியாத மோதல் ஏற்படுகிறது. அம்மோதலின் முடிவு சாதலில் காட்சியளிக்கிறது. ஊடாதவள் ஊடினுள்—ஊடக்கூடாதவள் ஊடினுள்—அதன் முடிவு சாதல். கண்ணகியின் ஊடல் கோவலனைக் கொலைக்களத்துக்கு அழைத்துப் போனது. இதுவரை ஊடாதிருந்தவள் ஊடத் தொடங்கியதால், கற்புடை மகளிர் ஊடமாட்டார்கள் எனக் கருதியிருந்த கோவலனின் கருத்தில் பிழை ஏற்பட்டுவிட்டது. அந்தப் பிழை அவனைச் சாவூர் நோக்கி இழுத்துச் சென்றது. பிழைகண்ட நெஞ்சம் கொலையுண்டு அமைதி அடைந்தது. சிருத நங்கை சிறினுள்—கூருத சொற்கூறி ஊடினுள்—அதன் பலன் மதுரை அழிந்தது. கோவலன் கொலையுண்டான். எந்த ஊடற்பண்பு இன்மை கோவலனைக் கண்ணகியிடமிருந்து பிரித்ததோ அதே ஊடற்பண்பு தலையெடுத்து அவனையே அழித்துவிட்டது. எனவே, ஊடல் கொலையிலே அமைதி கண்டது எனலாம்.

## தேவியின் ஊடல்

இதற்குச் சான்ருக மற்ருெரு நிகழ்ச்சியையும் சுட்ட லாம். தென்புலங்காத்த மன்னர் பெருந்தகையின் மனைவி கோப்பெருந்தேவி ஊடினுள். அவ்வூடலைத் தீர்க்க மன்னன் அவளை நாடி ஓடினன். அப்பொழுது பொற்கொல்லன் மன்னனை அணுகினன். சொல் தடுமாற மன்னன் ஓர் ஆணை இட்டான். அவ்வாணை கோவலனின் உயிரைக் குடித்தது. இங்கும் ஊடல்தான் இவ்வெதிர்பாரா முடி விற்குக் காரணம் ஆக அமைந்தது. ஊடல் தீர்க்கும் ஆவல், அதன் அடிப்படையில் எழுந்த விரைவு அதன் காரணமாகச் சொல் தடுமாற்றம் அதனுல் ஒருவனின் சாவு. இதுதான் அந்நிகழ்ச்சிக் கோவை. இந்நிகழ்ச்சியின் மறு பதிப்பு—கோவலனின் சாவின் எதிரொலி, நெடுஞ்செழிய னின் மரணம், நெடுஞ்செழியனின் இறப்புக்குக் காரணம் தேவியின் ஊடல். கோவலனின் இறப்புக்குக் காரணம் கண்ணகியின் ஊடல். இத்துடன் மட்டும் இச்சாவு நிகழ்ச்சி நின்றுவிடவில்லை. உயிரை மாய்க்கக் கணவனை அனுப்பி வைத்த ஊடல் வழக்காட மன்றம் ஏறியது. ஊடலுக்கு ஆட்பட்டு ஒன்றுமறியாதவனை உயிரிழக்கச் செய்த மன்ன னின் தேவியின் ஊடலோடு எதிர்நின்றது. இருவகை ஊடல்களும் செய்த செயலால் மூன்று உயிர்கள் பிரிந்தன. ஒருத்தியின் ஊடல் கணவனைக்கொன்று, தன்னையும் அழித் துக்கொள்ள வைத்தது. பிறிதொருத்தியின் ஊடல் கண வனைக் கொன்று, தன்னை அல்லலுற்று அழச்செய்து அடுத்த நாட்டுக்கு அனுப்பிவைத்தது. தேவியின் ஊடல் நிகழ்ச்சியும் கோவலனின் கருத்தை அரண்செய்யக் காண லாம். கற்புடையவர் ஊடக்கூடாது என்ற அவனது கொள்கை எவ்வளவு வலிமையானது என்பது இவ்வெதிர் மறை நிகழ்ச்சிகள் மூலம் நமக்கு உணர்த்தப்படுகிறது.

## மாதவியின் ஊடல்

கடலாடு காதையில் நடனமாடிய மாதவி மேல் ஐயுற்ருன் கோவலன். அவனது ஊடல் கோலத்தை நீக்க மாதவி பலவாறு முயன்ருள். இருப்பினும் அவன் மனம் அமைதி அடையவில்லை. ஊடல், கற்பு காதல் இவற்றைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினன். அச்சிந்தனையின் விரிவுதான் கானல்வரியின் தொடக்கம். சிந்தனைக்கு அடியாக அமைந்தது கண்ணகியின் நினைவு. நெஞ்சில் நிறைந்த நினைவில் மிதந்தவள் கண்ணகி. கண்ணெதிரே இருந்து கவிபாடி மகிழ்ந்தவள் மாதவி. கற்பும் கலையும் ஊடிட்ட மனம் கொண்ட உணர்ச்சிக் கொத்தாம் கோவலனிடம் நீதி கேட்டு நின்றன. சீர்தூக்கிச் செயலாற்ற வேண்டியவன் தன்னையுமறியாமல் கற்பின் பால் சாய்ந்தான். கற்பின் வெற்றியிலே அவன் கவிபாடினன். முதற் கவியே கற்பின் சிறப்பை எடுத்துரைத்தது. "கற்புடையவள் ஊடின்" என்பதை மாதவிக்குத் தெரிவிப்பதன் மூலம் அவளைத்தான் ஐயுறுவதைக் குறிப்பால் உணர்த்துகிருள். அவ்வுணர்வு தான் அவனை அடுத்த காதையில் "ஆடல் மகள்" என்று மாதவியைப் பழித்துரைக்கச் செய்தது. "நீ ஊடி மகிழ்கிருய். ஆனல் என் மனைவி ஊடவில்லை. ஏன் தெரியுமா? அவள் பெருங்கற்பினள்-கோவலன் மாதவிக்குச் சொல்லாமல் சொல்லிக்காட்டும் குறிப்புரை தான் கானல்வரியின் முதல் மூன்று பாட்டுக்களும் எனலாம். சோழன்-கோவலன்; காவிரி-கண்ணகி கங்கை-மாதவி: ஒப்புமையும் நிகழ்ச்சியும் பொருத்தமுற அமைகின்றன. அங்கு இதை மாதவியின் கலை உள்ளம் உணரவில்லை. மாருகக் கோவலனைத் தவருக எடை போட்டது அது. அவன் காதல் திசை மாறிவிட்டது என்று எண்ணித்துடித்தது அது. அத்தவறுதான் கலவியால் யாழ் வாங்கச் செய்து கானல்வரி பாடப் பணித்தது. அந்தப் பாடல்தான் கோவலனின் அலைமோதும் உள்ளத்

தில் ஆரவாரப் பெருக்கை உண்டு பண்ணியது. அவ்வார வாரமே உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழச் செய்தது. அதுவே தீதற்ற மாதவியைத் துறந்து கற்புக் கனலுடன் மதுரை நோக்கிச் செல்லவைத்தது. அந்த ஆரவாரச் செருக்கே, மாதவியை வாய்கூசாது ஏசச் செய்தது. கண்ணகியிடம் "மாறிவருவேன்" எனத் தடுமாறிச் சொல்லச் செய்தது. பொற்கொல்லனை நம்பச் செய்தது. கல்லாக் களிமகன் கரங்களில் கொலையுண்டு வீழச் செய்தது. கானல் வரியில் அவன்பாடிய பாடல்களில் ஆரவார உணர்ச்சியே மேலோங்கி நிற்பதனைக் காண்கிறோம். ஆனால் மாதவியின் பாடல்களில் பெண்மையின் மென்மை, தாய்மையின் பரிவு இவை இழையோடக் காண்கிறோம். உழவரோதையும் மதகோதையும் கோவலனுக்குத் தென்பட, அதே காவிரி மாதவிக்குத் தாயாகவும், சோழன் தந்தையாக"வும் அவன் தன் வளநாடு மகவாகவும் தோற்றமளிக்கின்றன. கணவன் நல்லவனானால் மனைவி நல்லவள் ஆவாள். ஆண் தான் பெண்ணின் பெருமைக்கு ஆதாரம் என்பது மாதவியின் கோட்பாடு. பெண்மையின் கற்புத்தான்-ஊடாத கற்புத்தான் ஆண்மையின் உயர்வுக்குக் காரணம் என்பது. கோவலனின் கொள்கை, இவ்விரண்டும் ஒன்றை ஒன்று இனம் காண முடியாதபடி செய்கிறது மாதவியின் ஊடல், தவறான அடிப்படையில் அவள் கொண்ட ஊடலே உண்மையை உணர முடியாதபடி அவனைத் தடுத்தது. அவ்வூடல் அவனை மதுரைக்கு அனுப்பிவைத்தது. அங்கு கண்ணகியின் ஊடல் அவனைச் சிலம்பை விற்றுவரச் செல்லுமாறு தூண்டியது. பாண்டிமாதேவியின் ஊடல் மன்னனின் ஆணையைத் தடுமாற வைத்துப் பழி ஏற்கவைத்தது. எனவே சிலம்பில் வரும் ஒவ்வொரு ஊடலும் தனக்கென ஒரு தீச்செயலைச் செய்து அதில் அமைதி காண்கிறது. இவ்வூடல்

களின் விளைவு—மூவரின் சாவு, இருவரின் துறவு, ஒருத்தியின் உயர்வு என்று முடிகின்றது.

கண்ணகியின் உயர்வுக்கு இவ்வூடல் மட்டுமே காரணமா என்றால் இல்லை ஏனெனில் இவ்வூடல் பண்புடைய மாதவியும், தேவியும் தெய்வநிலை பெறவில்லை சிலம்பில். அப்படியானல் வேறு என்ன காரணம்? அஃது அவளது பொறுமைப் பண்பே. பொறுமை பெருமை பெறுகிறது என்பதை எடுத்துக்காட்ட விழைகிறார் ஆசிரியர். அவளது பொறுமை என்னும் நிறைவோடு அவள் பட்ட துயரமும் அவலமும் செங்குட்டுவன் மனைவியின் மனதில் தோன்றிய அன்பிரக்கமும் அவளுக்குத் தெய்வ நிலையைத் தருகின்றன முடிவில். சேரனின் மனைவிதான் கண்ணகி கடவுளாதற்குக் காரணம் என்றால் அதில் தவறில்லை.

எனவே இளங்கோவின் கருத்தில் குலமகளிர்பால் ஊடல் பண்புக்கு இடமில்லை என்பதும் அதனால் அழிவுதான் ஏற்படும் என்பதும் நிலவிய உண்மைகள் என்பது தெளியும். கற்புடைய மங்கையர் ஊடக்கூடாது எனச் சிலம்பு வரையறுத்து உரைத்து எச்சரிக்கை செய்கிறது எனலாம். எனவே கண்ணகியிடம் ஊடற்பண்பு இன்மையே அவளிடமிருந்து கோவலனைப் பிரித்தது என்று கூறமுடியாது. அவ்விதம் கூறின், அதே ஊடல்தான் கோவலனைக் கொன்றது என்பதையும் சொல்லித் தீரவேண்டும். ஆடல் மகளின் ஊடல் அவனைப் புகாரைவிட்டு விரட்டியது என்றால் குலமகளின் ஊடல் அவனை இவ்வுலகைவிட்டே விரட்டியது. ஆடல் மகள் கொள்ளும் ஊடலை இளங்கோ கண்டிக்கவில்லை. அதனாற்றான் அவர் மாதவியைச் சொல்லுமிடத்தெல்லாம் அவள் ஊடற்பண்பைச் சிறப்பித்துச்

சொல்லிச் செல்கிறார் எனலாம். குலமகளின் ஊடலைவிட ஆடல்மகளின் ஊடல் தொல்லையில்லாதது என்பது அவர் கருத்து போலும். எஃது எப்படியிருப்பினும் கற்புடைய மகளிர்க்கு ஊடல் வேண்டாம் என்பது இளங்கோவின் கருத்து என்பதில் மறுப்புக்கு இடமில்லை. அப்படியானுல் கோவலன் கண்ணகியைப் பிரியக் காரணம் என்ன? அவனுடைய கலை உள்ளமே என்போம் நாம். இல்லை, அது விதியின் விளைவு என்பார் சிலம்பின் ஆசிரியர்.

## உலகம்

"பாவே"

உலக மெல்லாம் ஒருவனின் படைப்பேனில்
உலகினில் ஏனோ உயர்வு தாழ்வுகள்?
ஒவ்வொரு மனிதனும் உழைக்கப் பிறந்தான்!
இவ்விதம் இருக்க இதனில் சிலபேர்
உயர்ந்தார் என்ருல் உழைத்தோ உயர்ந்தார்?
அயர்ந்தவன் தன்னை அழுத்தியே உயர்ந்தார்.
இந்நிலை வளர்ந்தால் இவ்வுல கழியும்!
எந்த விதத்தும் ஏய்த்துப் பிழைக்கும்
தந்திரச் செயலைத் தடுத்திட வேண்டும்!
தாழ்வும் உயர்வும் தான்தான் வாழச்
சூழ்ச்சிகள் செய்திடச் சூழ்ந்தது என்பேன்
ஆண்டவன், விதியென, அழைப்ப தெல்லாம்
வேண்டா விளக்கம் விழிக்கும் மக்களை
அழுத்தி வைக்கும் அழுக்குடை நோக்கம்!
ஒழுக்கம் உண்மை உண்மையில் நேர்மை
என்றே வாழ்ந்தால் இவ்வுல குயிர்க்கும்!
அன்றேல் வீழும்! ஆம்! ஆம்! உண்மையே!

# கற்றதனாலாய பயன்

வித்துவான். வெ. சுப்பிரமணியன், தமிழாசிரியர்,
ஸ்ரீவெங்கடகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி,
கணியூர், கோவை.

கடவுள் வணக்கம் இதுவென உணர்த்தப் புகுந்த ஆசிரியர் திருவள்ளுவர் முதன் முதலில் கடவுள் ஒருவர் உண்டா? இல்லையா? என்பார்தம் ஐயப்பாட்டினைப் போக்குவான் தொடங்கி, கடவுள் ஒருவர் உண்டு என்பதை நிலை நாட்டியுள்ளார். தாம் கூறப்புகுந்த உலக நூலுக்கு ஏற்ற பொதுமையான தெய்வ வழிபாட்டு முறையையும் அருளியுள்ளார். கடவுள் வாழ்த்து என்பது கடவுளை வாழ்த்தும் வாழ்த்தாகும். அனைத்துலகப் பொருள்களின் அகத்தே உள்ளவராயும், அவற்றைக் கடந்தவராயும் இருப்பதால் இறைவன் கடவுள் எனப்பட்டார். வழுத்து என்னும் தொழிற் பெயரானது வாழ்த்து என்னும் முதனிலை திரிந்த தொழிற் பெயராயிற்று. வாழ்த்துதல் என்பதற்குப் போற்றுதல் என்பது பொருளாம்.

சின்னாள் பல்பிணிச் சிற்றறிவுயிராகிய நாம் ஏன் கடவுளை வாழ்த்துதல்வேண்டும்? கடவுளை வாழ்த்தும் வாழ்த்து நாம் வாழ்வதற்கேயாம். அஃதன்றி நித்தியமாய், சேதனனாய், ஞானவுருவினனாய் உள்ள அவ்விறைவனுக்காக வல்ல. இங்ஙனம் மக்களேயன்றி தேவர்களும் தாம் வாழ்வதற்காகவும், தம்மை வாழ்த்துவதற்காகவும் இறைவனை வாழ்த்துகின்றனர்.

''வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மையெல்லாம் தொழவேண்டிச்
சூழ்த்த மதுகர முரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப்பறுத்திவோன் யானும் உன்னைப் பரவுவனே.''

என்னும் மணிவாசகப் பெருமானின் அருள்வாக்கும் தெளிவு படுத்துகின்றது அன்றோ? மக்களாகப் பிறந்தோர் யாவரும் பெறவேண்டிய அறம் பொருள் இன்பவாழ்வினைப் பெற்று அந்தமில் இன்பத்தை அடைவதற்குச் செய்ய வேண்டுவது கடவுள் வழிபாடாம். அங்ஙனம் வழிபடும் முறையைத் தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் உரைத் தருளியமையைக் காண்பாம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு."

இம் முதற்பாவில் உலகிலுள்ள மொழிகளின் எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய எழுத்தைத் தம் முதல் எழுத்தாகக் கொண்டுள்ளன வென்றும் அதுபோலவே அனைத்துலக மும் கடவுளையே தலைவனாகப் பெற்றுள்ளது என்றும் கூறு கின்றார் ஆசிரியர்.

மனம் மொழி மெய்களுக்குப் புறத்தும் அகத்தும் நிற் பவராகிய கடவுளை உண்டென்றுஉணர்த்தியவர் அகரத்தை உவமையாகக் காட்டி அதனை யாவரும் மறுக்கலாகா வண் ணம் கூறியருளினார். எழுத்தே சொல்லுக்கு அடிப்படை யாய் விளங்குவது. சொல்லைக் கொண்டே நாம் நம்மை விளக்கிக் கொள்ளுகிறோம். மொழியில்லையெனில் நாம் நம் கருத்துக்களைப் பிறருக்குச் சொல்ல முடியாது. அதனால் நாம் மக்களாக வாழவியலாததோடு மாக்களாகவே இருப் போம். எனவே மக்கள் வாழ்விற்கு மொழியின்றியமையா தது. மொழிக்கு அடிப்படையாய் அமைந்திருப்பது எழுத் தாகும். சொல்லுக்கு முதற்காரணமாகத் தோன்றும் ஒலியே எழுத்தாகும். "மொழிமுதற் காரணமாம் அணுத் திரள் ஒலி எழுத்து" என்ற இலக்கண விதியும் காண்க.

உயிர், மெய், ஆகிய இரண்டின் சேர்க்கையாலும் தோன்றிய எழுத்துக்களால் மொழி உண்டாகிறது. அவற்

றில் 'அ' என்னும் எழுத்தானது தன்னை யொழிந்த ஏனைய உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் இயக்கு கிறது. அகரத்தின் விகார உருவமே ஏனைய உயிர்எழுத்துக் கள். மெய்யெழுத்துக்கள் தனித்து இயங்கும் வன்மை யுடையதன்று உயிருடன் கூடியே அவை இயங்கும், "மெய் யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்றார் தொல்காப் பியர்.

ஒலிகளுக்கு வடிவம் அமைத்து எழுதுவதால் எழுத்து என்று பெயராயிற்று. எழுத்துக்கு அட்சரம் என்றும் பெயர். அட்சரம் என்றால் அழியாதது என்பது பொருள். எனவே எழுத்தை யாரும் அழிக்க முடியாது. வடிவம் எழுத்தல்ல, வடிவத்திற்கு அடிப்படையாயுள்ள ஒலிதான் எழுத்தாகும். அ, ಅ, A இவ்வெழுத்துக்கள் குறிப் பிடும் ஒலி ஒன்றேயாம். இவை போன்று உலகிலுள்ள பல மொழிகளும் வெவ்வேறு வடிவத்தைப் பெற்றிருப்பினும் ஒலி ஒன்றேயாகும் என்பதையறிந்த வள்ளுவர் 'எழுத்தெல் லாம்' என்றார்.

அகரமே ஒலியின் முதல் தோற்றமாகும். பின்னர் அது உகரமும் மகரமுமாகி ஓங்காரமாயிற்று. அ+உ+ம்= ஓம் என்பதாயிற்று. ஓங்காரத்தோற்றமே உலக இயற்கை. இயற்கை கடவுளிடத்திலிருந்து உண்டாயிற்று "Nature is Gods Art" என்று ஆங்கிலத்திலும் கூறுவர். இயற்கையைக் கடந்துள்ளவன் இயற்கையினுள்ளும் இருக்கின்றான். ஆதலால் இறைவன் கடவுள் என்னும் பெயர் பெற்றார்போலும். இயற்கைக்கு அப்பால் உள்ள பரம்பொருள் ஒலியாகத் தோன்றுவதால் நாதப்பிரம்மம் என்கிறோம். அந்த நாதமே அகரமுமாகி மகரமுமாகி ஓம் என்னும் பிரணவமும் ஆயிற்று. இதனின்று அகரமே

எழுத்துக்கெல்லாம் முதலாக அமைந்துள்ளமை நன்கு விளங்கும். இதனாலன்றோ கீதாசாரியனான கண்ணபெருமானும் "எழுத்துக்களில் அகரமாகின்றேன் நான்" என்று அருளியுள்ளார். அகரத்திற்குத் தலைமை விகாரத்தான் அன்றி நாதமாத்திரையாகிய இயல்பால் பிறத்தலினன்றே தெய்வப்புலவர் 'அகரமுதல்' என்று உரைத்தருளினார்.

ஒலியானது இறைவடிவம். உலகமானது சக்திவடிவம். இவ்விரண்டும் ஒன்றியதே இவ்வுலக இயக்கம். அகரமானது தானே இயங்குவதும் ஏனைய எழுத்துக்களை இயக்குவதுமாக நிற்பதுபோல இறைவனும் அமைதியாய்த் தான் எல்லாப் பொருள்களுக்கும் மேலாய் நின்று அவைகளை இயக்கியும் யாதொரு பற்றும் அற்று நிலையாய் என்றுமுளன் என்பது விளங்கும். ஒலியானே தலைமை பெற்ற அகரமே போல இறைவனுக்குத் தலைமை செயற்கை உணர்வானன்றி இயற்கை உணர்வால் முற்றும் உணர்தல் உண்மையுங் கூறினார்.

பகவன் என்ற சொல்லுக்குச் சிவன், திருமால், பிரமன் அருகன், புத்தன் எனப் பல பொருள் உண்டு. உலகின் எம்மதத்தினரது கொள்கைக்கும் மாறுபடாத பொதுமையான இறைவனைக் குறிக்கும் 'பகவன்' என்னும் சொல்லையே எடுத்தருளினார். உலகில் மக்கள் ஆதிகாலந் தொட்டு வணங்கிவரும் தெய்வம் ஆதிபகவனேயாவன் என்றும் அவ்விறைவனே இவ்வுலகிற்கும் மற்றெவ்வுலகிற்கும் தலைவன் என்பதையும் உணர்த்துமுகத்தான் "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

அறிந்ததைக் கொண்டு அறியாததை விளங்கவைத்தல் என்னும் கருத்திற்கிணங்க கண்டதனின்று காணப்படாத

கடவுளை உணர்த்தினார். அகரமுதலே போல ஆதிபகவன் முதற்றேயென உலகின்மேல் வைத்துக் கூறினார். இம்முதற் திருக்குறளால் கடவுள் ஒருவர் உண்டு என்பதை நிலைநிறுத்தினார் திருவள்ளுவர்.

கடவுள் ஒருவர் உண்டு என்பதை அறிந்தோம். பின்னர் செய்ய வேண்டுவது யாது? இயற்கையை அறிந்து அவற்றின்பால் அன்புகொண்டு அவ்வியற்கையோடியைந்து இன்புற்று வாழ்ந்து இறுதியில் பேரின்பநிலையினைப் பெறுதல் வேண்டும். இங்ஙனம் வாழ்ந்து அந்தமில் இன்பத்தினை அடையும்பேறு மக்கட் பிறவிக்கே யுண்டு, மனிதப்பிறவி கிடைத்தற்கரிய பிறவி என்பதனை ஆன்றோர்கள் வாக்கானும் உணரலாம். "அரிதரிது மானுடராதல் அரிது" என்ற ஔவையார் வாக்கும், "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது" என்ற தாயுமானார் வாக்கும் மனிதப் பிறவியின் அருஞ்செவ்வியைக் காட்டுவனவாம். மனிதன் என்ற சொல்லின் பொருள் மிக உயர்ந்ததாகக் காணப்படுகிறது. மன் + இதன். மன்—நிலைத்த இதன்—இன்பத்தையுடையவன். அழிவில் இன்பமாகிய பேரின்பத்தை உடையவனாகின்றான் என்றே பொருள்படும். இவ்வாறு எளிமையில் அமைந்துள்ள பொருளை மனிதன் அரிய முயற்சி கொண்டு அடைய வேண்டியவனாய் இருக்கின்றான்.

அத்தகைய அருமையான மனிதப்பிறவியும் எளிதில் வாய்ப்பதல்ல. பலபிறவிகளில் உழன்று உழன்று வருந்திய பின்னரே மனிதப் பிறவி வாய்ப்பதாம். மணிவாசகப் பெருமானார்,

> "புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
> பல்விருக்க மாகிப் பறவையாய் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
> வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்"

என்று கூறியருளினமையானும் உணரலாம். இதனுனே பலபிறவிகட்குப் பிறகே மனிதப்பிறவி வாய்க்கும் என்பதையும் நன்கு அறியலாம். இவ்வரும் பெரும்பிறவியை எடுத்த மக்கள் அறிவுடைமையைப் பெற கல்வியைக் கற்க வேண்டும்.

உலகில் கற்கவேண்டிய நூல்களை அறிவுநூல் என்றும், உலகநூல் என்றும் பகுத்துள்ளனர். அறிவு நூலாவது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றைத்தரும் நூலாகும். உலக நூலாவது இம்மைக்கு வேண்டிய நலன்களை மட்டும் கொடுத்து என்றும் இடையருப் பிறப்பில் செலுத்துவதாகும். இதனை நாலடியார்,

''அலகுசால் கற்றும் அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவ தெல்லாம்—கலகல
கூஉவுந்துணை யல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒந்துணை யறிவாரில்''

என்று கூறுகிறது. உலகநூலைக் கற்பதோடு ஞான நூல்களையும் கற்கவேண்டும் என்பதறிந்தோம். நமக்குப் பயன்படும் கல்வியைக் கற்றல் வேண்டும். உயிர்கொடுக்கும் பொருளை, வாழ்வளிக்கும் பொருளை, நம்மைக் காட்டிலும் அறிவும் ஆற்றலும் மிக்கபொருளை உணர்த்தும் உண்மைக் கல்வியையே கற்கவேண்டும். அஃதாவது இம்மையில் அறம், பொருள், இன்ப வாழ்வையும் மறுமையில் வீடு பேற்றையும் அளிக்கவல்ல கல்வியைக் கற்கவேண்டும் என்பதாம். 'கற்பவை' என்று வள்ளுவர் கூறியதும் இதுவேயாகும், தெய்வப்புலவர்.

''கற்கக் கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என்று கூறியுள்ளமையை ஓர்க. கல்வியைக் கற்பதோடு அதற்கு ஏற்ப வாழவேண்டும் என்பதையும் உணர்த்திஞர். ''The Great aim of Education is not Knowledge but Action'' என்று ஆங்கிலத்திலும் கூறுவர்.

அங்ஙனம் கல்வியைக் கற்று வாழ்பவர் செய்யவேண்டுவது யாது? என்பார்க்கு விடையாகவே இரண்டாவது குறளை அருளிச் செய்துள்ளார் திருவள்ளுவர்.

''கற்றத ஞல்ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தோழா அர் எனின்''.

உண்மை உணர்வினையுடைய இறைவனது நல்ல திருவடிகளை வணங்காதவராயின் எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக் கல்வி அறிவிஞல் ஆய பயன் யாது? ஒன்றுமில்லை என்பதாம். பல நூல்களைக் கற்று அறிவை வளர்ப்பவர் பேரறிவாக விளங்கும் கடவுளைத் தொழுதலே கற்றதஞல் ஆகிய பயஞகும் என்ருராயிற்று.

# 'மானங்காத்த மங்கையர்'

(மதுரைக் குமரன்)

ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்து வெளியேறுவது என்று முடிவு செய்ததும் ஆட்சியை யாரிடம் ஒப்படைப்பது என்ற கேள்வி பிறந்தது இதைப்பற்றி நாட்டின் பெருந்தலைவர்களிடையே கருத்து ஒற்றுமை இல்லை. முகமதியர்களின் தலைவர் அவர்களுக்குத் தனிநாடு வேண்டுமென்றார். மற்றவர்கள் அவ்வாறு நாட்டைத் துண்டுபோடக் கூடாது என்றனர் இதனால் அவர்களிடையே இருந்த வேற்றுமை வளர்ந்ததே ஒழிய ஒற்றுமை ஏற்படவில்லை. பிரித்து ஆளுவதில் வல்லமையுடைய ஆங்கிலேயர் நாட்டைத் துண்டு போடுவதை ஓரளவு ஆதரித்தனர், காந்தியடிகள் அதை அறவே வெறுத்தார், நாட்டைத் துண்டு போட்டுத்தான் பெறவேண்டுமெனின் அவ் விடுதலையும் தனியாட்சியும் வேண்டாம் என்றார். துண்டுபோடாமல் முகமதியர்களிடமே ஆட்சியை விட்டுச்செல்லுங்கள் என்றும் ஆங்கிலேயரிடம் கூறினார். ஆனால் ஒருவரும் அதற்குச் செவி சாய்க்கவில்லை. இச்சூழ்நிலையைப் பலகயவர்கள் பயன்படுத்திக்கொண்டு வகுப்புக் கலவரங்களைத் தூண்டிவிட்டனர்.

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
வோப்பாரி யாங்கண்ட தில்"

தோற்றத்தில் கயவர்களும் மனிதர்களைப் போன்றே இருப்பார்கள் என்றார் வள்ளுவனார். அவர்களில் பலர் தேசபக்தர்களைப் போலவும், சமயத் தொண்டர்களைப் போலவும் நடிப்பர். தக்க வாய்ப்புக் கிடைத்த விநாடியிலேயே மிருகமாக மாறிவிடுவர். இத்தகைய கயவர்கள் நாட்டில் குழப்பத்தை

ஏற்படுத்தினர். ஒருபாவமும் அறியாத பல்லாயிரக் கணக்கான ஆண்கள் பெண்கள் குழந்தைகள் இரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். இப்பயங்கரச் செயல்கள் ஒவ்வொருநாளும் வளர்ந்து கொண்டே வந்தன. அவைகளைக் கண்டு மனங்கொள்ளாது நாட்டுப் பிரிவினையையாவது ஏற்றுக்கொள்வோம் என்று துணிந்தனர் தலைவர்கள்.

நாடு துண்டுபோடப்பட்டு, ஆட்சியை இந்தியரிடம் ஒப்படைத்துவிட்டு ஆங்கிலேயர் சென்றுவிடுவர் என்று அறிவிக்கப்பெற்றது. 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் நாள் நடு இரவு என்று அதற்கு நாளும் காலமும் குறிக்கப்பெற்றது. இச்செய்தியைக் கேட்டபின் நாட்டில் கலவரங்கள் அடங்கும் என்று கருதப் பெற்றது. ஆனால் அதற்கு நேர்மாறாக கலவரங்கள் பன்மடங்கு பெருகிற்று. பல தலைமுறையாக ஒற்றுமையாய் உடன்பிறந்தார்போன்று வாழ்ந்து வந்தவர்கள் ஒருவருக்கொருவரைப்பகைவர்களாக எண்ணி அச்சமுற்றனர் அதன் பயனாய் கொலை, கொள்ளை கற்பழித்தல் முதலிய கொடுஞ் செயல்களில் பலர் ஈடுபட்டனர். நாட்டின் பல பகுதிகளில் இத் தீச்செயல்கள் நடைபெற்றன நாட்டின் பிரிவினை எல்லைக்கோட்டின் இருபுறங்களிலும் இரத்தம் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடிற்று, ஒரு தீங்குஞ் செய்தறியாத மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். பெண்கள் என்றோ குழந்தைகள் என்றோ இரக்கம் காட்டப் படவில்லை. உலகமே இதைக் கண்டு திடுக்கிட்டது. பல்லாயிர ஆண்டுகள் உலகத்திற்கு நாகரிகத்தையும் அன்பையும் பண்பையும் போதித்து வந்த நாடு இவ்வாறு ஒரு விநாடியில் இழிந்த நிலைக்கு வந்துவிட்டது. எனினும் இவ்விருளுக்கிடையே பழைய பண்பாட்டின் ஒளிகள் ஆங்காங்கே தென்பட்டன.

பஞ்சாப்பில் சீக்கியர்கள் வாழும் ஒரு சிறுகிராமம். ஒருநாள்இரவு குண்டர்கள்கூட்டம் ஒன்று அக்கிராமத்தைச் சூழ்ந்துகொண்டது. கிராம மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள எதிர்த்து நின்றனர். இருதரப்பினர்களிடமும் துப்பாக்கிகள் இருந்தன. மூன்று நாட்கள் இரவும் பகலும் தொடர்ந்து சண்டை நடந்தது. முற்றுகையிட்ட குண்டர்களுக்கு ஆள்பலமும் துப்பாக்கி மருந்துகளும் உணவும் வேண்டிய அளவு கிடைத்துக் கொண்டிருந்தன. சீக்கியர்கள் வீரத்துடன் எதிர்த்துப் போராடினர். அவர்களில் பலர் காயமுற்றனர்; பலர் மாண்டனர்; கையிலிருந்த வெடி மருந்துகளும் தீர்ந்து விட்டன. வெளியிருந்து உதவிவருவதற்கும் வழியில்லை. அவர்கள் தலைவனும் படுகாயமுற்றான். இந்நிலையில் வேறு வழியின்றிக் குண்டர்களுக்குப் பணிய வேண்டியதாயிற்று. வெற்றிபெற்ற குண்டர்கள் கிராம மக்கள் அனைவரும் முகமதியர்களாக வேண்டுமென்று நிபந்தனை விதித்தனர். அதற்காக மறுநாட் காலை எல்லோரும் ஆயத்தமாக இருக்க வேண்டுமென்று கட்டளையிட்டனர்.

மறுநாட் காலை குண்டர்கள் கத்தரிக்கோல்களுடன் வந்தனர். சீக்கியர்களின் தலைமுடியையும் தாடியையும் கத்தரித்து அவர்களை முகமதியர்களாக்க எண்ணினர். பெண்களையும் அவர்கள் விடவில்லை. கிராமத்திலிருந்த பெண்கள் அனைவரையும் ஒன்று திரட்டினர். மொத்தம் எழுபத்தி நான்கு பெண்கள் இருந்தனர். சந்தைகளில் விற்பனைக்கு நிறுத்தப்பட்டிருக்கும் ஆடு மாடுகளைப் பார்ப்பது போல் அப்பெண்கள் ஒவ்வொருவரையும் பார்த்தனர். எந்தெந்தப் பெண்ணை யார்யார் உடமையாகக்கொள்ள வேண்டும் என்பதை வெளிப்படையாகவே பேசி அவர்களுக்குள் முடிவு செய்துகொண்டனர். அதைக்கேட்டுப் பெண்கள் நடுநடுங்கி நின்றனர்.

ஆண்களை மதம் மாற்றிய பின் பெண்கள் அழைக்கப் பட்டனர். அப்பொழுது அவர்களுள் சற்று வயதில் மூத்த ஓர் அன்னை முன்வந்து குண்டர்களிடம் ஒன்று வேண்டிக் கொண்டாள். "நாங்கள் அனைவரும் உங்கள் விருப்பம்போல் மதம் மாறுவதற்கு முன் கடைசி முறையாக ஆண்டவனை எங்கள் வழக்கம் போல் வழிபட விரும்புகின்றோம்; மேலும் நாங்கள் கிராமத்தில் புதிதாகத் தோண்டியுள்ள கிணற்றி லும் கடைசி முறையாக நீர் அருந்த விரும்புகின்றோம்" என்று கூறினாள். சிறிது நேரத்தில் தங்கள் உடைமைக ளாகப் போகும் பெண்களின் விருப்பத்திற்கு இணங்குவது பயனுள்ளதாகும் என்று கருதி அதற்குக் குண்டர்கள் இசைவு தந்தனர்.

எழுபத்து நான்கு பெண்மணிகளும் கிணறு இருக்கும் தோட்டத்திற்குள் புகுந்தனர். அத்தோட்டத்தைச் சுற்றி நான்கு புறங்களும் சுற்றுச்சுவர்கள் இருந்தன. கிணற்றில் இறங்குவதற்குப் படிக்கட்டுகள் இருந்தன. அதன் வழி எல் லோரும் இறங்கி முழுகினர். இறைவனை வழிபட்டனர். அதற்குள் வெளியிலிருந்த குண்டர்கள் பொறுமை இழந்து அவர்களைச் சீக்கிரம் வெளியில் வரும்படி கூவினர். உள்ளி ருந்து அதற்குப் பதில் தெளிவாகவும் உறுதியாகவும் கிடைத்தது. "உங்களுக்குத் தைரியமிருந்தால் இங்கே வாருங்கள், எங்களை உயிருடன் நீங்கள் தொட முடியாது!", என்று கூறினாள் முன்பேசிய அன்னை. அதைத் தொடர்ந்து 'திம், திம்' என்று நீரில் குதிக்கும் ஒலிகள் கேட்டன. குண் டர்கள் உள்ளே ஓடிவந்து பார்த்தபொழுது பெண்கள் அனைவரும் கிணற்றில் பிரேதமாகக் கிடந்தனர். அக்காட்சி யைக் கண்டு அவர்கள் கல்நெஞ்சங்களும் கலங்கின, தலை குனிந்து வாய்பேசாமல் அங்கிருந்து சென்று விட்டனர்.

இச்செய்தி கேட்டு உதவியாட்கள் வந்து பார்த்த பொழுது எழுபத்து நால்வரில் பதினெட்டு வயதே நிரம்பிய ஒரு பெண் மட்டும் உயிருடன் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டனர். அவள் ஒருத்தியை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. பின்னர் அப்பெண்மணி காந்தியடிகளாரிடம் இந் நிகழ்ச்சிகளைக் கூறினாள். எதற்கும் கலங்காத அடிகள் இதைக் கேட்டுக் கண் கலங்கினார். அகிம்சையின் பயனாய்த் தோன்றிய ஊக்கம் எப்பொழுதும் தோல்வியடையாது; சூழ்நிலை மனித சக்திக்கு மீறியதாக இருந்தால் ஆண்டவன் சிறிதும் எதிர்பாராத வழியில் உதவிசெய்வான் என்று கூறினார்.

இப்பெண்மணிகள் உயிரினும் மானம் பெரிது என்று கருதினர். மானம் இழந்து வாழ்வது எவ்வளவு சிறப்புடையதாக இருப்பினும் அஃது ஒரு வாழ்வு ஆகாது. அதைவிட இழிவு வேறில்லை என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அதனாலன்றோ எழுபத்துமூவரும் உயிர் நீத்தனர். நல்ல குடிப்பிறப்பைப் பெற்றவர்கள் மானம் அழிந்த பின் உடம்பைப் பேணி உயிருடன் மேலும் வாழ வேண்டுமென்று எண்ணமாட்டார்கள் என்று வள்ளுப் பெருந்தகையார் கூறியுள்ளதை உள்ளுவோமாக.

"இன்னுயிர் நீத்தே எழுபத்து மூவரும்
தன்மானங் காத்தல் தகுமேயோ - என்றின்
மருந்தோ மற்றூனோம்பும் வாழ்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து"

# எல்லா எழுத்துள்ளும் அகரம் கலந்துள்ளதா?

(பசுமலை. பகா. சுந்தரம். எம். ஏ)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

இக்குறட்கு உரை கூறுங்கால், அகரத்தின் இயல்புகளை உவமையாகக் கொண்டு, பகவன் இயல்புகளோடு இணைத்துக் காட்டி விளக்கி விரித்துரைத்து வருகின்றனர். (1) "அகரம் எல்லா எழுத்துக்களையும் கலந்து இயக்கித் தானும் தனித்தியங்கும்—அதுபோல ஆதிபகவனும் எல்லாப் பொருட்களையும் கலந்து இயக்கித் தானும் தனித்து இயங்குபவன்." (2) "அகரம் இயங்காவழி அனைத்து எழுத்தும் இயங்கா. அதுபோல பகவன் இயங்கா வழி, அனைத்தும் இயங்கா."

மேற்காட்டிய விளக்கவுரையில், அகரத்தைப் பற்றிக் கூறிய கருத்துக்கள், தமிழ் ஒலியியல்புக்குப் பொருந்தியவை ஆகுமா? அகரம் எல்லா எழுத்துள்ளும் உள்ளதா? அகரம் இன்றேல் அனைத்து எழுத்தும் இல்லையா? அகரம் எல்லா எழுத்துக்களையும் இயக்குகின்றதா? என ஆராய்ந்து உண்மை காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

1. தமிழில் முதலில் உள்ள பத்து உயிரெழுத்துக்களும் ஒன்றற்கொன்று கலப்பின்றித் தனித்தனியாய் இயங்குவன. ஆனல் ஐகாரத்துள்ளும் ஔகாரத்துள்ளும் மட்டும், அகர ஒலிப்புக்கூறு கலந்துள்ளது. 'இ' என்று ஒலிக்கும்போதும், 'உ' என்று ஒலிக்கும்போதும் அகர ஒலி சிறிதும் கலக்கவில்லை. இவற்றை ஒலித்து அறியலாம்.

மேலும் 'எ' என ஒலிக்கும்போதும், அகர ஒலி சிறிதும் இல்லை; ஆனால் 'இ' ஒலிப்பு 'எ' ஒலிப்பினுள்ளே ஒத்துச் சிறிது கலந்துள்ளதால், இ, எ, இரண்டும் ஓரின எழுத்துக்கள் ஆகும். மேலும் 'ஒ' என ஒலிக்கும்போது, உகர ஒலிப்புக்கூறு சிறிது கலந்துள்ளதேயன்றி, அகர ஒலி சிறிதும் கலக்கவில்லை. ஆதலால்தான், உ, ஒ, இரண்டும் ஓரின எழுத்துக்கள் எனப்பட்டன. எனவே, ஆ, ஐ, ஔ என்ற மூன்று உயிர் எழுத்துக்கள் நீங்கப் பிற உயிர் எழுத்துக்களில் அகரம் கலக்கவில்லை என்பதை ஒலித்துப் பார்த்து அறியலாகும்.

2. சிலர் கூறலாம் "அகரத்திற்குரிய அங்காப்பு (வாய் திறத்தல்) முயற்சி எல்லா எழுத்துக்கட்கும் தேவைப்படுவதால், எல்லா எழுத்துள்ளும் அகரம் கலந்துள்ளது" என்று. இவ்வாறு கூறுவது எவ்வாறு பொருந்தும்? அங்காப்பு ஒரு முயற்சியே யன்றி, ஒலிப்பு ஆகவே ஆகாது. முயற்சிக் கலப்பினை, ஒலிப்புக் கலப்பு என்றல் பொருந்தாது. அஃதாவது அங்காப்பாகிய முயற்சிகலந்ததை அகர ஒலி கலந்ததாகக் கூறுவது பொருந்தாது. மேலும் அங்காப்பு முயற்சி அனைத்து எழுத்துக் கட்கும் தேவைப்படுவது. அஃது எல்லா எழுத்துக்கட்கும் பொதுவானது. ஆகையால், அங்காப்பு முயற்சி, அகரத்திற்கே உரியது என்றல் ஏற்றற்குரியதன்று.

இனி, அகரம் எல்லா உயிர்க்கண்ணும் கலந்துள்ளது என முதன்முதலில் யார் கூறியது? - அவ்வாறு கூறக் காரணம் என்ன? எனக் காண்போம். "அகரம் உயிர்க்கண்ணும், தனிமெய்க் கண்ணும் கலந்து, அவற்றின் தன்மையாயே நிற்கும்" என நச்சினார்க்கினியர் தொல்காப்பியர் எழுத்ததிகாரத்துள் (மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் என்னும் சூத்திரவுரையுள்) விளக்கிச் சென்றார். இவ

ரைப் பின்பற்றிச் சிவஞான முனிவர் நன்னூல் விருத்தியுரையுள் இக்கருத்தை விளக்கினர். இவை யாவும் உரையாசிரியர்களின் கற்பனை விளக்கங்களே யன்றித், தொல்காப்பியர் கருத்தாகா. தொல்காப்பியத்துள்ளோ, நன்னூலுள்ளோ, அகரம் எல்லா உயிருள்ளும் கலந்துள்ளது என எங்கும் கூறப்படவில்லை.

அகரக் கூறும் இகரக் கூறும், சேர்ந்து தம்முள் ஒத்திசைப்பது எகரமாகும் என்று விளக்கியது தமிழ் ஒலியியலுக்குப் பொருந்தாது. வடமொழிச் சந்தியிலக்கணத்துள், "அ + இ = ஏ" என ஆகும் என்பது விதி. எ-டு: தேவ + இந்திரன் = தேவேந்திரன். இவ்வாறு சமசுகிருதத்தில் சந்தியிலக்கணம் வகுத்தது, ஒரு கற்பனை விதியின் அடிப்படையே யன்றி, ஒலியியலுக்குப் பொருந்தாது. அ, இ— இரண்டும் சேர்ந்தால், 'ஏ' ஆகாது. ஒலிநுட்பச் சேர்க்கையின் இயல்புப்படி 'ஏ' ஒலிப்பில் 'அ' ஒலிப்புக்கூறு சிறிதும் இல்லை. சமசுகிருதச் சந்தியிலக்கணம் கற்பனையாக அமைந்தது, ஒலிநுண்ணியல்புக் கிணங்க, இயற்கையாக அமைந்தது அன்று எனவே, அகர, இகரம் சேர்ந்து எகரம் ஆகும் என்பது பொருந்தாது. இதுபோலவே, ஒகரத்திற்கு நன்னூல் விருத்தியுள் கூறிய ஒலியியல் அமைப்பும் பொருந்தாது. இவையெல்லாம், இயற்கைக்குப் பொருந்தாத, ஒலிநுண்ணியல்புக்கு முரண்பட்ட, கற்பனையாக அமைத்துக் கொண்ட சமசுகிருத இலக்கணத்தை வலிந்து புகுத்தியதேயாகும்.

மேற்கூறியவற்றால், அகரம் எல்லா எழுத்துள்ளும் கலக்கவில்லை என்பதுவும், ஆ, ஐ, ஔ நீங்கிய பிற உயிர் எழுத்துக்கள் எல்லாம் அகரத்தின் உதவியின்றி இயங்கும் என்பதுவும் அறியலாகும். அகரம் எல்லா உயிர் எழுத்துள்ளும் கலந்துள்ளது என்ற தவருன, இயற்கைக்கு முரணன

ஒலியிலக்கணத்தைத் தமிழில் நச்சினார்க்கினியர் புகுத்திய தால், அதனடிப்படையில் தவறான உரை விளக்கங்கள் குறட்குத் தோன்றி வளர்ந்து வலுப்பெறலாயின. தொல் காப்பியரோ, வள்ளுவரோ, சமசுகிருத இலக்கணத்தைப் பின்பற்றி அகரத்தின் இயல்பை விளக்கவில்லை. அகரம் எல்லா உயிருள்ளும் கலந்துள்ளது என்றதுவும் அகரம் இன்றேல் அனைத்துயிரும் இயங்கா என்றதுவும் பொருந் தாதவையாகும். ஆனால் கடவுள் உயிருள் கலந்துள்ளமை ஏற்றற் குரியதே. ஆயினும் இக்கருத்தை விளக்குவதற்காக, வள்ளுவர் அகரத்தைக் கூறவில்லை என்பது அறியலாகும்.

---

## கடமையுணர்வு

அன்பு. கருணையானந்தம்.

கருவிளை யாடலிலே காலங் கழிப்போம்
திருவிளை யாடலுண்மை தேரோம்! — அருளுளமே
கொண்டவர்க்கே நம்பெருமான் கோதில்விளை யாடலெலாம்
உண்டவர்க்கே நம்வணக்கம் உண்டு.

பொய்யுணர்வால் நாளெல்லாம் போக்காது நாம்பெரியீர்
மெய்யுணர்வால் நற்பணிசெய் மேலோர்போல்-உய்யுணர்வே
உள்ளமதில் கொண்டினிய உண்மைத் திருவருளின்
வெள்ளமதில் தோய்வோம் விரைந்து.

# அமரர் நேருவுக்கு அஞ்சலி

இரா. வே. நாராயணன், எம். ஏ.

நம்மனோர் அனைவரது உள்ளத்திலும் உற்ற துயரத்தின் நிழல் படிந்திருக்கும் போதில், பண்டித ஜவகர்லால் நேரு அவர்களைப் பற்றி எழுதுவது என்பது சங்கடம்தான்.

பண்டிதர் அவர்கள், ஒரு மாபெரும் தலைவர்: அந்தச் சொல்லின் ஒவ்வொரு விதமான பொருளுக்கும் அவர் தகுதியானவர்தான். அவர், மக்களை உரிமையுலகத்துக்கு, குடியரசுத் தகுதிக்கு, ஒற்றுமைக்கு அழைத்துச் சென்றார்; அதே நேரத்தில், உலக நாடுகளின் இடையில் உன்னதமான ஓர் இடத்தை, இந்த நாட்டுக்குப் பெற்றும் தந்தார்.

சென்ற பதினான்கு ஆண்டுகளாக, புதிய இந்தியாவின் சிற்பியாக இருந்துள்ளார். அவர் இந்த நாட்டின் தேசிய வாழ்வில் ஒவ்வொரு துறையையும் சிறப்படையச் செய்திருக்கிறார். குறிப்பாக, அரசியல் பொருளாதாரத் துறைகளில், புதிய காலகட்டத்தை உண்டாக்கினார்.

ஒரு சர்வாதிகாரியைக் காட்டிலும் அதிகமான வன்மையைப் பெற்றிருந்தார்; அதற்காக, எந்த முறையில் ஆத்திரமூட்டப்பட்ட போதிலும், குடியாட்சிக் கொள்கைகளைக் கைவிடவும் இல்லை; மனிதாபிமானம் நிறைந்த கண்ணோட்டத்தைக் கைகழுவியதும் இல்லை.

தகுதியான, நியாயமான கொள்கைகளுக்காக இந்தியாவில் மட்டுமல்லாது, உலக முழுதும் போராட்டம் நடத்திய வீரராகத்தான் அவர் இருந்தார். வெறும் பொட்டலிலிருந்து இந்த நாட்டுக்கென்று ஒரு வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கினார்; அதுமட்டும் அல்லாமல், உலக சமாதானத்தின் வழியாக, உலக அரசு அமைக்கவும் பாடுபட்டார் உலக விவகாரங்களில், சட்ட ஆட்சியின் சாயலையாவது கொண்டுவரவேண்டுமென்று முயன்ற தலைசிறந்த அரசியல் தலைவர் அவர்தான்.

உலக அமைதிக்கு உழைத்த உத்தமர், அவரது சொற்கள், நாடுகளின் மன்றங்களிலுஞ்சரி ஐ.நா. பேரவையிலும் மிகவும் மரியாதையுடன் கேட்கப்பட்டன. பல்வேறு நாடுகளின் பல்வேறு சிக்கல்களைக் கடக்க அவர் முயன்றார். அனைத்து நாடுகளின் அஞ்சலி, உலக நாடுகளின் மீது அவருக்கிருந்த செல்வாக்கினைத்தான் சுட்டிக்காட்டுகிறது. பண்டித நேருவின் வாழ்வு, தியாக வாழ்வாகும். அவர்

தலைசிறந்த காரணங்களுக்காகவே வாழ்ந்தார். உலக வரலாற்றில் தனது முத்திரையைப் பதித்துச்சென்றுவிட்டார்.

இந்தியாவைப் பொறுத்தமட்டிலும், நாட்டை உருவாக்கியவர்களுள், வாழ்க்கை முழுவதும், தன்னுடைய தாயகம் தலைமையானதாக, வளம்பெற்றதாக, வளர்ச்சியுற்றதாக ஆகவேண்டும் என்றதற்காகவே வாழ்ந்துவந்தார்

அவருக்கு மிக அதிகமான, வரலாற்றுணர்ச்சி இருந்தது. மனித இனம் முழுவதும் ஒரு குடும்பமாக வளரும்; அதற்கு ஐ. நா. உதவும்; மனிதத் திறனை மிக நெருக்கம் உடையதாக்கி, மனித இனத்திற்கான உலகத் திட்டங்கள் காரணமாக அவை வளர்ச்சிபெறும் என்றேகனவு கண்டார்.

நேரு சகாப்தம் முடிவடைந்துவிட்டது. அவர் தொடங்கிய வேலை இன்னும் முடிவடையவில்லை. அவரது உயில், நமக்கு உணர்ச்சியைத் தந்து எதிர்காலத்தைத் துணிவொடும், ஒற்றுமையொடும் கட்டுப்பாட்டொடும் ஏற்றுக்கொள்வதற்கு வழி செய்கிறது.

அவர் இந்தியாவை உளமார, நெஞ்சு நிறைய நேசித்தார். குமரியிலிருந்து காசுமீரம் வரை வாழ்வோர் அனைவரும் அவரது உறவினரே; எல்லா இந்தியர்களின் நன்மைக்கும் வளர்ச்சிக்குமே அவர் பாடுபட்டார்; வாழ்ந்தார்.

நாட்டுப் பற்று உடையோர்களின் நாயகராக, வீரத்திடை வீரராக, மன்னர் மன்னராக, மறவர் மறவராக, குடியரசுகளிடை மன்னர் பெருமானுக உலக அரசியல் தலைவர்களின் தலைவராக இருந்தார்.

பிறர் எல்லோரும் அமைதியொடும் அன்பொடும் வாழ வேண்டும் என்பதற்காக, அவர் பெரும்பாடுபட்டார். மனிதனின் கண்ணின்நீரைத் துடைத்தெறியவே அவர் சலியாது உழைத்தார்.

உலகத்தின் தலைசிறந்த குடிமக்களுள் ஒருவர், மனித இனத்தின் ஒரு பகுதியானவர், காலத்தின் தலைமகனர், அவர், அவரது காரியங்களைக் காட்டிலும் உயர்ந்தவராகவும், சூழல்களைக் காட்டிலும் உண்மையானவராகவும் இருந்தார்.

"சந்தன மரமானது வீழ்ந்துபட்டது; மணம், நந்தாது நிற்கும்; நானிலம் முழுதும் பரவி மல்கும்" என்பதை அவர் மறைவு நினைவு மூட்டுகிறது.

## மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

### I. சங்க வெளியீடு

| | | | ரூ. | அ | ப |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக் கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

### II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கஞுநூல் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாக யோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சன தீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப் பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பக மூலமும் உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினா விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகை திருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக் கட்டளை | — | 0 | 3 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 33. | உவமான சங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 |
| 49. | கூடற்புராணம் | — | 0 | 10 |
| 50. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 |
| 51. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 |
| 52. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 |
| 53. | பாப்பாவினம் | — | 0 | 10 |
| 54. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 |
| 55. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 |
| 56. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 |
| 57. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 |
| 58. | கலைசைக்கோவை | — | 0 | 12 |
| 59. | பெருந்தொகை | — | 5 | 0 |
| 60. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 |
| 61. | சிராமலைக்கோவை | — | 0 | 12 |
| 62. | மத்யவியாயோகம் | — | 0 | 2 |
| 63. | அமிர்தரஞ்ஜநி | — | 0 | 2 |
| 64. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 |
| 65. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 |
| 66. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 |
| 67. | மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் | — | 2 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 59 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்பு புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

---

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.